முதன்மை தலைமைப் பொறியாளர், நீஆது., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),
பொபது., அலுவலகம், சேப்பாக்கம், சென்னை-5.

முன்னிலை: பொறி. கு.இராமமூர்த்தி, B.E., M.B.A.,
முதன்மை தலைமைப் பொறியாளர், நீஆது., (ம)
தலைமைப் பொறியாளர் (பொது) பொபது.,

செயல்முறை ஆணை எண். எஸ்.12(2)/26810 /2019/ நாள்.31.10.2019

பொருள் : பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதி - த.நா.அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்கள் - பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் துவக்கி - ஆணை வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை : 1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை கடித எண்.1150/ PSD-H2/2019 நாள்.18.02.2019.
2. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.எஸ்3(3)/25366/ 2019 நாள் 25.02.2019.

-----

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட போட்டி தேர்வு 2015-16, 2016-17 மற்றும் 2017-18-ம் ஆண்டுகளுக்கான தொகுதி 4-ன் மூலமாக தெரிவு செய்யப்பட்டு, பார்வை 2-ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி இவ்வலுவலகத்தில் பணியில் சேர்ந்துள்ள கீழ்காணும் இளநிலை உதவியாளர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம்-2016, தமிழ்நாடு சட்டம்-14/2016, பிரிவு எண்.28 (1)-ன்படி பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண் | தேர்வாணைய வரிசை எண் | பெயர் | பிறந்த தேதி | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|---|
| 1. | 04 | திருமதி பி.தாரணி | 21.10.1993 | 08.03.2019 மு.ப. |
| 2. | 101 | திருமதி. வி.தேன்மொழி | 23.01.1984 | 08.03.2019 மு.ப. |

இவர்கள் தங்களது தகுதிகாண் பருவத்தினை பணி வரன்முறைப்படுத்தப்பட்ட நாள் முதல் துவக்கியதாக கருதப்படுவார்கள். மேற்படி, நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்றாண்டு காலத்திற்குள், இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவம் முடிக்க வேண்டும் எனவும், இப்பதவிக்கென நிர்ணயிக்கப்பட்ட பவானிசாகர் அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்ய வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பார்வை 1-ல் காணும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு மேற்கூறிய இளநிலை உதவியாளர்களுக்கு "சென்னை உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில்" தொடுக்கப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்குட்பட்டது என்ற நிபந்தனையுடன் இப்பணிவரன்முறை ஆணை வழங்கப்படுகிறது.

கு.இராமமூர்த்தி,
முதன்மை தலைமைப் பொறியாளர், நீஆது.,
(ம) தலைமைப் பொறியாளர் (பொது) பொபது.,

பெறுநர்

மேற்கண்ட பணியாளர்கள்.
முதன்மை தலைமைப் பொறியாளர், நீஆது., (ம)
தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகம்,
சேப்பாக்கம், சென்னை-5
நகல் - கோப்பிற்கு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

1/11/19
கண்காணிப்பாளர்.